முருகப்பெருமான் துணை

**மகான் மானக்கஞ்சாற நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**11.11.2023**, சனிக்கிழமை

1. அண்ணலே கலியுக ஞானியே
அறமாக வாழும் தவசியே
மண்ணுலகை மீட்க வேண்டி
மகான் சுப்பிரமண்யர் அருளும் வண்ணம்
2. வண்ணமுடன் ஞானம் தந்து
வையகத்தில் ஞான வான்களை
நன்னயமாய் படைத்து உலகினில்
ஞானம் வழங்கும் அரங்கனே
3. அரங்கனே உன்பெருமை கூறி
அகிலமதில் அறிவுரை ஆசி
வரங்களாக சோபகிருது துலைதிங்கள்
வழங்குவேன் இருபானைதிகதி காரிவாரம்
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 25ம் நாள், 11.11.2023, சனிக்கிழமை)
4. வாரமதில் மானக்கஞ்சாற நாயனாரும்
வையகம் வளமுற உரைப்பேன்
சோரமிலா ஞானப்படைகளை
சுப்பிரமண்யர் வழிபாடு கொண்டு
5. கொண்டுமே சரவணச்சுடரேற்றி
குறைவிலா ஓங்கார ஞானம்
தொண்டர்களாக்கி அருள
தேசிகன் வழி வரும் மக்கள்
6. மக்களெல்லாம் ஞானவழித் தேறி
மகத்துவம் அரங்கனால் அடைந்து
ஆக்கமும் பக்குவமும் கூடி
அறம் வளர்த்து சுயகரும வினை நீக்கி

7. நீக்கியே ஞானிகள் தேடுகின்ற
நிலவுலகில் ஞானவான்களாக
ஊக்கம் பெற தரும சேவை
உலகமெலாம் ஆற்றும் தருமவான்களாக
8. ஆகவே நிலைகள் உயர்ந்து
ஆற்றல் மிக்க ஞானப்படைகளாக
செகமெங்கிலும் தேறியே
செப்பிடுவேன் ஞானத்தலைமை
9. தலைமை படைக்கும் வண்ணம்
தரணியில் இணைவை கூட்டி
ஊழல் லஞ்சம் லாவண்யம்
உயிர்கொலை பசிபிணி அல்லல் இல்லா
10. அல்லலிலா அமைதிபாதுகாப்பு
அனைவருக்கும் அடிப்படை தேவை
எல்லாக் காலமும் கிட்டிடும்படி
எளிமைபட எந்த தேடலும் அடைய
11. அடையும்படி அனுகும்படி சேவை
ஆட்சி வழிஅமையும் வண்ணம்
தடையற ஞான ஆட்சிபடைப்பர்
தாமுரைத்த அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–